**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு. ம.சி. கண்ணதாசன்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஜெயங்கொண்டம்.

**2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 01–ஆம் நாள் திங்கள்கிழமை**

**I.A.05/2025 in OS. 40/2014**

ராமகிருஷ்ணன் ... மனுதாரர்

/எதிர்/

1. பிச்சைபிள்ளை
2. கிருஷ்ணமூர்த்தி
3. ஆலய மணி
4. ராதா
5. கலர்மணி
6. மகாலெட்சுமி ...எதிர்மனுதாரர்கள்

இம்மனு இறுதியாக 05.08.2025–அன்று விசாரணைக்கு வந்ததில் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.ஜெயராமன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.ஆர். பழனிமுத்து அவர்கள் முன்னிலையாகியும், மனு, எதிருரை மற்றும் பிரமாணவாக்குமூலம் ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**உத்தரவு**

இம்மனுவானது கடந்த 25.03.2025 ந் தேதி தள்ளுபடியான IA No.3/2024 மனுவை மீண்டும் மறு பையிலுக்கு எடுத்துக்கொள்ள உத்தரவாக வேண்டி சி.பி.சி.ஆர்டர் 9 ரூல் 9 மற்றும் பிரிவு 151 ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் மனுவின் சுருக்கம்:**

1. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், இந்த நம்பரில் எதிர்மனுதாரர்கள் பேரில் தாவா தாக்கல் செய்து மேற்படி தாவா தள்ளுபடியானது என்றும், தள்ளுபடியான தாவாவை Restore செய்ய மனு



M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN
Date: 2025.09.01 00:04:15 +0530

தாக்கல் செய்து மேற்படி மனு IA No.3/2024 என்று நம்பராகி R4 Fresh Notice Want of Correct address என்று வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், மேற்படி R4 க்கு 24.09.2024 தேதியன்றும், 22.10.2024 தேதியன்றும் மேலும் 04.03.2025 தேதியன்றும் பேட்டா செலுத்தப்பட்டும் R4 க்கு சார்வாகவில்லை என்றும், மேற்படி 25.03.2025 அன்று R4 க்கு பேட்டா செலுத்தவில்லை என்று தாவா தள்ளுபடி ஆனது என்றும், இது வேண்டுமென்றோ அலட்சியமாகவோ நீதிமன்றத்தில் R4 க்கு பேட்டா செலுத்தாமல் இல்லை என்றும், ஆகையால் 25.03.2025 ல் தள்ளுபடியான IA No.3/2024 ஐ மீண்டும் மறு பையிலுக்கு எடுத்துக்கொள்ள உத்திரவாக வேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1 ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:</u>**

2. எதிர்மனுதாரர் அசல்வழக்கில் 1 ம் பிரதிவாதி என்றும், மனுவில் கூறியுள்ள சங்கதிகள் உண்மையானவை அல்ல என்றும், மனுதாரர் தரப்பில் மேற்படி வழக்கினை விசாரணை செய்வதற்காக கடந்த 28.06.2024 தேதியில் நீதிமன்றத்தில் இறுதியாக வாய்தா போடப்பட்டிருந்நது என்றும், மனுதாரரர் தரப்பில் வழக்கினை விசாரணை செய்வதற்கு முன்வராத காரணத்தினால் மனுதாரருக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் இந்த வழக்கினை காலம் கடத்தும் நோக்கில் வேண்டுமென்றே ஏதாவதொரு காரணத்தினைக் கூறி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், ஆகையால் மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவாக வேண்டுமென்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டுள்ளது. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

4. **<u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.</u>**


M S KANNADHASAN
Digitally signed by M S KANNADHASAN
Date: 2025.09.01 00:04:27 +0530

**<u>பிரச்சனைக்கான தீர்வு:–</u>**

5. மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மனு சங்கதிகளை குறிப்பிட்டு இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் எதிருரை சங்கதிகளை குறிப்பிட்டு இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டனர்.

6. மனு, எதிருரை, எதிர்மனுதாரர் தரப்பு வாதம் மற்றும் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்ததில் கடந்த 19.06.2024 ல் விசாரணைக்கு வாதி ஆஜராகாததால் தள்ளுபடியான தாவாவை மீண்டும் கோப்பிற்கு எடுக்க போடப்பட்ட I.A.3/2024 மனுவானது R4 க்கு Fresh Notice Want of Correct address என்று வாய்தா போடப்பட்டு 04.03.2025 அன்று R4 க்கு Bata கட்டவில்லை என அந்த மனுவானது தள்ளுபடி ஆகியுள்ளது. மேலும் அசல் வழக்கினை பரிசீலனை செய்து பார்க்கையில் 15.03.2024 ம் தேதி வாதி தரப்பில் Reply Statement அளிக்கவில்லை என Close செய்யப்பட்டுள்ளது. Reply Statement அளிக்கவில்லை என Close செய்யப்பட்டதை Reopen செய்ய தாக்கல் செய்யப்பட்ட I.A4/2024 மனுவானது தள்ளுபடி ஆகியுள்ளது.

7. 04.03.2025 ல் மேற்படி பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா மாற்றப்பட்டுள்ளது. தற்போது மனுதாரர் R4 க்கு Fresh Notice Want of Correct address என்று வாய்தா போடப்பட்டு 04.03.2025 அன்று R4 க்கு Bata கட்டவில்லை என தள்ளுபடியான I.A.3/2024 மனுவை மீண்டும் கோப்பிற்கு எடுக்க வேண்டி 22.04.2025 அன்று இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். தற்போது மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளது அவர் அசல் வழக்கை மேல் நடத்த முன்வருவதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும், இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் தரப்பினர்களுக்கு அவரவர் தரப்பு கட்சியை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவது அவசியமானது என்பதாலும், அப்பொழுதுதான் வழக்கின்

M S KANNADHASAN
Digitally signed by M S KANNADHASAN
Date: 2025.09.01 00:04:39 +0530

உண்மை தன்மையை காண்பதற்கும், வழக்கின் தீர்க்கமான முடிவு ஏற்படுவதற்கும், பல வழக்குகள் ஏற்படும் நிலையை தடுப்பதற்கும் வாய்ப்பாக அமையும் என்றும், மேற்படி வழக்கானது நிலுவையில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும் மனுதாரர்களின் மனுவினை அனுமதிக்கப்பட வேண்டியது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று கருதி அதன்படியே இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

8. மேற்படி மனு அனுமதிக்கப்படும் பட்சத்தில் எதிர்மனுதாரருக்கு போக்குவரத்து போன்ற சிற்சில செலவுகள் ஏற்பட்டிருக்கக்கூடும் என்பதால் மேற்படி மனுவானது செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என கருதி அதன்படியே இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

9. முடிவில், மனுதாரர் எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகை ரூ.500/– ஐ வரும் 18.09.2025 தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

அழைக்க : 19.09.2025

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 01-ம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN Date: 2025.09.01 00:04:48 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்: இல்லை.

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN Date: 2025.09.01 00:04:54 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.